செய்தி வெளியீடு எண்.463 நாள் 22.11.2006

## வருவாய்த்துறை ஆய்வு முடிவு அறிவிப்புகள்

## சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வு பணிகள்

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடமிருந்து ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் ரூ.2347.19 கோடியும், உலக வங்கியின் மூலம் ரூ.1852.74 கோடியும், ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம் ரூ.629.64 கோடியும், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி வங்கியின் மூலம் ரூ67.5 கோடியும் என தமிழ்நாடு அரசால் பெறப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.4897.07 கோடியாகும். இந்த ஒதுக்கீட்டில், கடந்த ஆட்சி காலத்தில் உடனடி நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்குதல் ஆகியவற்றிற்கு மட்டுமே நிதி செலவிடப்பட்டு, நிரந்தர வீடுகள் கட்டுதல், கட்டமைப்பு வசதிகளை சீரமைத்தல், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வருவாய் ஈட்ட உதவும் வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற நீண்டகால சீரமைப்புப் பணிகளில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாதிருந்தது. இந்த நிலையைக் கண்டறிந்து, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்களின் ஆய்வுக் கூட்டத்தை 24.6.2006 அன்று கூட்டி, சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 54,087 நிரந்தர வீடுகள் கட்டப்படவேண்டிய இலக்குக்கு எதிராக, 24.6.2006 அன்று இருந்த நிலையின்படி தொண்டு நிறுவனங்கள் மூலம் 8406 வீடுகளே கட்டிமுடிக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. தொண்டு நிறுவனங்களின் மூலம் வீடுகள் கட்டப்படும்

பணிகள் முடுக்கிவிடப்படவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இன்று (22.11.2006) சுனாமி நிவாரணப்பணிகள் மற்றும் மறு வாழ்வுப் பணிகள் குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆய்வு நடத்தியபோது, 15.11.2006 அன்று உள்ள நிலையின்படி இதுவரை 16,514 வீடுகள் தொண்டு நிறுவனங்களால் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. அதாவது இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, இந்த குறுகிய காலத்திலேயே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டு நிறுவனங்களின் மூலம் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை இருமடங்காக உயர்ந்துள்ளது. இந்தப் பணி மேலும் விரைவுபடுத்தப்பட்டு 2007 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை 30,806 ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் 19,108 குடும்பங்களுக்கு அடுக்கு மாடிக் கட்டடக் குடியிருப்புகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குத் தேவையான நகர ஊரமைப்பு இயக்குநரின் அனுமதிகள் மற்றும் விலக்கு தொடர்பான ஆணைகள் மற்றும் கடலோரக் கட்டமைப்பு ஒழுங்குமுறைகளின் கீழ் தேவைப்படும் ஒப்புதல்கள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்ட இயலாத 2,671 வீடுகள் கண்டறியப்பட்டு இந்த வீடுகளை அரசே கட்ட முடிவு செய்து 3000 வீடுகளுக்கு வீடு ஒன்றிற்கு ரூ.2.1 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மற்றும் புயல், வெள்ளம் போன்ற மற்ற இயற்கை சீற்றங்களின் பாதிப்புக்கும் உள்ளாகக் கூடிய அபாயம் உள்ள கடலோர பகுதிகளில், கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீட்டர் வரை உள்ள பகுதிகளில் குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணையின் அடிப்படையில் உலக வங்கி மற்றும் மத்திய திட்டக்குழு ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து இந்தப் பணிகளுக்கான ஒரு பெரும் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் பெறத் தகுதியான குடும்பங்களைக் கண்டறியும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பணி 15.12.2006 அன்று முடிவுறும். இக்கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கூறிய இரண்டாவது கட்ட நிரந்தர வீடுகள் கட்டும் பணித்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த வகையில், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்காக ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் வலைகள், கைவிளக்குகள், மீன்களை எடுத்துச் செல்ல மிதி வண்டிகள், உயிர்காக்கும் உடை ஆகியவற்றை ரூ.110 கோடி மதிப்பீட்டில் வழங்க ஆணையிட்டுள்ளது. இப்பொருள்கள் விரைவில் கொள்முதல் செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் ஆகியவை சீரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர பகுதிகளில் சாலைகள், மழை நீர் வடிகால்கள், தெரு விளக்கு வசதி போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9